# கள்ளக்குறிச்சி நகராட்சி

கள்ளக்குறிச்சி நகராட்சியில் மன்ற கூட்டம் 2018 ஜனவரி மாதம் 30ம் தேதி செவ்வாய் கிழமை காலை 11.30 மணிக்கு தனி அலுவலர் அவர்கள் தலைமையில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை.. திருமதி சா.லெட்சுமி, M.Com.,**
**தனி அலுவலர் / ஆணையாளர்**

## கூட்ட பொருள்கள்

### பொருள் எண் – 01

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் தாய்மார்கள் பாலூட்டும் அறைக்கு அருகில் காலியாக உள்ள இடத்தில், நகராட்சிக்கு வருவாய் பெருக்கும் வகையில் புதியதாக மூன்று எண்ணிக்கையில் கடைகளாக பிரித்து கட்டுவதற்கு ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளரின் நேரடி தல ஆய்வின்போது தெரிவித்து உத்தேசிக்கப்பட்டது. அதனடிப்படையில் பேருந்து நிலையத்தில் காலியாகவுள்ள இடத்தில் மூன்று கடைகளாக பிரித்து கட்டுவதற்கும், மேலும் அப்பகுதியில் சிதலடைந்த தளத்தினை பழுது நீக்கம் செய்வதற்கும் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.3,50,000/–(ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)–க்கு நிர்வாக அனுமதிக்கும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியினை விரைந்து முடித்து நகராட்சியின் வருவாய் பெருக்கிட வேண்டி தனி அலுவலரின் முன்னனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 214/2018இ1

### பொருள் எண் – 02

கள்ளக்குறிச்சி நகராட்சியில் பொதுசுகாதாரப் பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனஙகள் அனைத்தும் நகராட்சி அலுவலகத்தில், திறந்தவெளியில் நிறுத்தப்பட்டு வருவதால், அடிக்கடி பழுதுகள் ஏற்படும் சூழ்நிலையில் உள்ளது. மேலும், நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்களின் வாகனஙகள் நிறுத்துவதற்கு நிழற்கூடம் (Shed ) இல்லாமல் உள்ளது. எனவே, மேற்படி பொது சுகாதார பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனஙகளுக்கும், பணிபுரியும் பணியாளர்களின் வாகனஙகள் நிறுத்துவதற்கும் புதியதாக நிழற்கூடம் (Shed ) அமைப்பது மிகவும் முக்கியமாகிறது. எனவே, மேற்காணும் பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.3,50,000/–(ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)–க்கும் நிர்வாக அனுமதிக்கும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் /2018/இ1)

## பொருள் எண் – 03

கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பணிகள் குறித்து அறிவிப்பு செய்ய தினசரி நாளிதழில் விளம்பரத்தினை வெளியிட்ட மாலைமலர், தினமணி, தினத்தந்தி மற்றும் தினபூமி நாளிதழ்களுக்கான பட்டியல் தொகையினை தனித்தனியே செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எ | நாளிதழ் பெயர் | விளம்பரத்தின் விபரம் | பட்டியல் விபரம் | பட்டியல் தொகை ரூ |
|---|---|---|---|---|
| 1 | மாலைமலர் | தூய்மை இந்தியா திட்டத்தின் திறந்த வெளி கழிப்பிடமற்ற நகராட்சியாக அறிவிக்க அறிவிப்பு செய்தது | CUD-D70800060 Dated 18.09.2017 | 5166 |
| 2 | தினமணி | தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் 2,3,11,16,17 மற்றும் 18 ஆகிய வார்டுகளை திறந்தவெளி மலம் கழித்தல் அற்ற வார்டுகளாக அறிவிக்க அறிவிப்பு வெளியிட்டது. | 711780/VM dated 24.06.2017 | 2120 |
| 3 | தினத்தந்தி | தூய்மை இந்தியா திட்டத்தின் திறந்த வெளி கழிப்பிடமற்ற நகராட்சியாக அறிவிக்க அறிவிப்பு செய்தது | CDL 17-18-00003241 dated 19.09.2017 | 6678 |
| 4 | தினபூமி | கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில் பிளாஸ்டிக் தடை செய்யப்பட்டது குறித்த விளம்பரம் செய்தது | 60101 dated 19.07.2017 | 55566 |

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட விளம்பரம் வெளியிட்ட நாளிதழ்களிடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகையினை பொது நிதியிலிருந்து செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் அ4/2996/2017

## பொருள் எண் – 04

கள்ளக்குறிச்சி நகராட்சியில், **வருவாய் □னி 2017-2018-**ம் ஆண்டிற்கு, கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு 23.01.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரத்தினை தனி அலுவலர் அவர்களின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின்பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1. | கச்சிராயபாளையம் சாலை வி.ஐ.பி. கார்டன் பூங்கா இடத்தில் சுற்று சுவர் கட்டுதல் (வார்டு எண். 01) | ரூ. 9,00,000/- | **திருமதி. S.பத்மா, கள்ளக்குறிச்சி** | **0.30 % மதிப்பீட்டிற்கும் குறைவு** |
| | | | M/s. J.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 4.62 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 2. | விளாந்தாங்கல் சாலை டி.எம்.எஸ். நகர் பூங்கா இடத்தில் கிழக்கு புறம் சுற்று சுவர் கட்டுதல் (வார்டு எண். 21) | ரூ. 9,00,000/- | **M/s. J.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி** | **0.45 % மதிப்பீட்டிற்கும் குறைவு** |
| | | | திருமதி. S.பத்மா, கள்ளக்குறிச்சி | 1.75 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 3. | விளாந்தாங்கல் சாலை டி.எம்.எஸ். நகர் பூங்கா இடத்தில் வடக்கு புறம் சுற்று சுவர் கட்டுதல் (வார்டு எண். 21) | ரூ. 5,00,000/- | **M/s. C.J. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி** | **0.22 % மதிப்பீட்டிற்கும் குறைவு** |
| | | | திரு. P.நடராஜன், கள்ளக்குறிச்சி | 0.68 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 4. | துருகம் சாலை மயானத்தில் சுற்று சுவர் கட்டுதல் (வார்டு எண். 10) | ரூ. 9,50,000/- | **திரு. P.நடராஜன், கள்ளக்குறிச்சி** | **0.24 % மதிப்பீட்டிற்கும் குறைவு** |
| | | | M/s. C.J. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 1.77 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவரச, அவசியத்தினை கருத்தில் கொண்டு தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3068 / 2017 / இ1)**

**<u>பொருள் எண் – 05</u>**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (TURIP) 2017-2018ன் கீழ் ரூ. 200.00 இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலைகள் அமைக்கும் பணிக்கு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண். 21422 / 2017 / E3 நாள். 03.10.2017ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை-5 அவர்களின் செயல்முறை ந.க.எண். 24545 / 2017 / DO1 நாள். 16.11.2017-ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு, அதற்கிணங்க கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 28.12.2017 ஆம் தேதியன்று மின்னனு முறையில் (E-Tendering) ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரத்தினை தனி அலுவலர் அவர்களின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண். 01, கச்சிராயபாளையம் சாலை தீப்பெட்டி தொழிற்சாலை செல்லும் சாலை, கிருஷ்ணா நகர் சாலை தார்சாலை அமைக்கும் பணி, வார்டு எண். 10, எம்.ஆர்.என். நகர் 1-வது மற்றும் 3-வது குறுக்குத் தெரு தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி, துருகம் சாலை ரங்கன் நகர் மற்றும் கோபுரம் மோட்டார்ஸ அருகிலுள்ள சாலை தார்சாலை அமைக்கும் பணி, விநாயகா நகர் குறுக்குத் தெரு தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் கட்டுதல் பணி, வார்டு எண். 11, சிதம்பரம்பிள்ளைத் தெரு பாரதி நகரில் தார்சாலை ம்ற்றும் மழைநீர் வடிகால் கட்டுதல் பணி, வார்டு எண். 12, அண்ணாநகர் ஈ.பி. காலனி பிரதான சாலையில் தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் கட்டுதல் பணி, அண்ணாநகர் பாலாஜி நகர் தார்சாலை அமைக்கும் பணி, அண்ணாநகர் வள்ளலார் தெரு தார்சாலை அமைக்கும் பணி, வார்டு எண். 15 ஏமப்பேர் கரியப்பாநகர் விஜயலட்சுமி நகர் தார்சாலை அமைக்கும் பணி, வார்டு எண். 21, விளாந்தாங்கல் ரோடு பி.ஆர்.எஸ். நகர் தார்சாலை மற்றும் டி.எம்.எஸ். நகர் தார்சாலை அமைக்கும் பணி | ரூ. 200.00 | **திருவாளர்கள். ஸ்ரீ வேலா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி** | **+4.96 % மதிப்பீட்டிற்கும் அதிகம்** |
| | | | திரு. K.மணி, கள்ளக்குறிச்சி | +6.83 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |

மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டைவிட கூடுதலான விலை விகிதத்தில் இரு ஒப்பந்ததாரர்களும்

ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ளனர். மேலும், வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி + 4.96% மதிப்பீட்டைவிட கூடுதலாக அளித்துள்ள **"திருவாளர்கள். ஸ்ரீ வேலா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி"** என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி கூடுதலாக உள்ளதால், L1 ஒப்பந்ததாரராக கருதி, விலைக்குறைப்பு செய்துதர 05.01.2018 அன்று கோரியதில், 08.01.2018 அன்று ஒப்பந்ததாரர் அளித்துள்ள கடிதத்தில், **+4.96%**-லிருந்து அனைத்து இனங்களுக்கும் **+4.75%**-க்கு குறைத்து சம்மத கடிதம் கொடுத்துள்ளார். மேலும், விலை குறைப்பு செய்துதர, 08.01.2018 அன்று ஒப்பந்ததாரரை கோரியதில், 11.01.2018 அன்று ஒப்பந்ததாரர் அளித்துள்ள கடிதத்தில், தற்போதுள்ள கட்டுமான பொருட்களின் விலையேற்றம், மணல் பற்றாக்குறை, பணியாளர்களின் சம்பள உயர்வின் காரணமாக, **+4.75%**-லிருந்து அனைத்து இனங்களுக்கும் **+4.50%**-க்கு இறுதியாக குறைத்து சம்மத கடிதம் கொடுத்துள்ளார். மீண்டும் விலை குறைப்பு செய்துதர 18.01.2018 அன்று கோரியதில், 23.01.2018 அன்று ஒப்பந்தாரர் அளித்துள்ள கடிதத்தில், தற்போதுள்ள கட்டுமான பொருட்களின் கடும் விலையேற்றத்தின் காரணமாகவும், மணல் குவாரிகள் செயல்படாததால் ஏற்பட்டுள்ள மணல் தட்டுப்பாட்டின் காரணமாகவும், பணிபுரியும் வேலையாட்களின் சம்பள உயர்வின் காரணமாகவும், ஏற்கனவே சம்மத கடிதம் அளித்துள்ள **+4.50%**-லிருந்து குறைத்துதர இயலாது என தெரிவித்துள்ளார்.

எனவே, திட்டப்பணியின் அவசர, அவசியத்தினை கருதி **+4.50%**-க்கு மதிப்பீட்டைவிட கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி (சம்மத கடிதம்) அளித்துள்ள, **"திருவாளர்கள். ஸ்ரீ வேலா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி"** என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க தனி அலுவலர் அவர்களின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. **"திருவாளர்கள். ஸ்ரீ வேலா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி"** என்ற நிறுவனத்தார் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி (சம்மத கடிதம்) விலை விகிதம் மதிப்பீட்டைவிட கூடுதலாக **+4.50%** என்ற விலைவிகிதத்தினை திட்டப்பணியின் அவசர, அவசியம் கருதி தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
3. திட்டப்பணியின் அவசர, அவசியத்தினை கருதி தனி அலுவலரின் முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.
4. மேற்படி பணிக்கு கூடுதலாகும் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 2180 / 2017 / இ1 )**

## பொருள் எண் –06

கள்ளக்குறிச்சி நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையத்தில் கட்டண கழிவறைக்கு தெற்குபுறம் காலியாகவுள்ள இடத்தில், ஆக்கிரமிப்புகள் ஏதும் ஏற்படா வண்ணமும், பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பொதுமக்களால் அசுத்தங்கள் ஏதும் செய்யாமலிருக்கவும், நகராட்சிக்கு வருவாய் பெருக்கும் நோக்கத்தில் புதியதாக தற்காலிக கடைகள் கட்டி பொது ஏலத்தில் விடுவதற்கு ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளரின் நேரடி தல ஆய்வின் போது தெரிவித்து உத்தேசிக்கப்பட்டது. அதனடிப்படையில், கச்சேரி சாலையிலிருந்து பேருந்து நிலையத்திற்கு உள்ளே செல்லும் நடைபாதையில் தெற்குபுறம் காலியாகவுள்ள இடத்தில் தற்காலிக கடைகள் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 9,85,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து என்பத்தி ஐந்தாயிரம் மட்டும்)–க்கு நிர்வாக அனுமதிக்கும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

தனிஅலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்

**( ந.க.எண். / 2017 / இ1 )**

## பொருள் எண்–07

கள்ளக்குறிச்சி நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையத்தில் இலவச சிறுநீர் கழிப்பிடம் அருகில் தெற்குபுறம் காலியாகவுள்ள இடத்தில், நகராட்சிக்கு வருவாய் பெருக்கும் வகையில் புதியதாக தற்காலிக கடைகள் கட்டி பொது ஏலத்தில் விடுவதற்கு ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளரின் நேரடி தல ஆய்வின் போது தெரிவித்து உத்தேசிக்கப்பட்டது. அதனடிப்படையில், பழைய நகராட்சி அலுவலகம் செல்லும் சாலையிலிருந்து பேருந்து நிலையத்திற்கு உள்ளே செல்லும் பாதையில் தெற்குபுறம் காலியாகவுள்ள இடத்தில் தற்காலிக கடைகள் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 4,00,000/- (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்)—க்கு நிர்வாக அனுமதிக்கும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

தனிஅலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்

**( ந.க.எண். 331 / 2018 / இ1 )**

## பொருள் எண் – 08

கள்ளக்குறிச்சி நகராட்சியில் பயன்பாட்டில் உள்ள கணினிகளுக்கு 10 எண்ணிக்கையில் யுபிஎஸ் பேட்டரிகள் வாங்க இந்நகராட்சி மன்ற தீர்மான எண் 139/2017 நாள் 29.11.2017ன்படி அனுமதிக்கப்பட்டுள்ளது. புதியதாக பேட்டரி வாங்கி பொருத்த ஏற்கனவே உள்ள ஸ்டாண்ட் பொருந்தாத காரணத்தினால், புதியதாக ஸ்டாண்ட் வாங்க உள்ளூர் பேட்டரி பொறுத்தும் நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | வரப்பெற்ற விலைப்புள்ளி ரூ. |
|---|---|---|
| 1 | ஏ.ஜி இன்டஸ்டரிஸ் | 5350/— |
| 2 | ஜி.எஸ்.இன்டஸ்டரிஸ் | 6250/— |
| 3 | குறிஞ்சி இன்ஜினியரிங் ஒர்க் | 5850/— |

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஏ.ஜி.இன்டஸ்டரிஸ் என்ற நிறுவனத்திடமிருந்து பேட்டரி ஸ்டாண்ட் வாங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. அதற்கான பட்டியல் தொகையினை பொது நிதியிலிருந்து செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் அ1/ 3121 / 2017

## பொருள் எண் – 09

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் புணரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, கடந்த 07.01.2018 அன்று திறப்பு விழா செய்யப்பட்டது. பொதுமக்களுக்கு அறியும் வகையில் தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/— (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்ற நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்து கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்.
3. தினசரி நாளிதழ்களிலிருந்து பெறப்படும் பட்டியல் தொகையினை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் இ1/ 135 / 2018

## பொருள் எண் – 10

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தினை கள்ளக்குறிச்சி சட்ட மன்ற உறுப்பினர் அவர்களால் நேரடி ஆய்வு மேற்கொள்ளப்பட்டபோது, பேருந்து நிலையத்தில் கீழ்க்காணும் பணிகளை உடனடியாக மேற்கொள்ளவும், அதற்கான மதிப்பீடுகள் தயார் செய்யவும் நேரடியாக தெரிவித்துள்ளதன் அடிப்படையில், அப்பணிகளுக்கான தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகைகள் பின்வருமாறு.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | பேருந்து நிலைய கட்டண கழிவறை பின்புறம் முதல் கழிவு மண் சேகரமாகும் தொட்டி வரையில் மழைநீர் வடிகால் கட்டுதல் | 9.40 |
| 2 | பேருந்து நிலைய கிழக்குப்புறம் இலவச கழிவறை முதல் பழை நகராட்சி அலுவலகம் செல்லும் சாலை வரையில் மழைநீர் வடிகால், சிறுபாலம் மற்றும் பேருந்து நிலைய கிணற்றின் மேல்பகுதி சிமெண்ட் கான்கிரீட் மூடி அமைத்தல் | 9.80 |

மேற்காணும் விபரப்படி உள்ள பணிகளை மேற்கொள்ளவும், அதற்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகைகளுக்கு நிர்வாக அனுமதியும், இப்பணிகளை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற் கொள்ளவும் தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. பேருந்து நிலைய பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை உடனடியாக மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 330/2018/இ1)

**த□ அலுவல□**
**கள்ளக்குறிச்சி நகராட்சி**